மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM தேசியம் (Sinhala)

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர்: 01 | குரல்: 114 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஞாயிற்றுக்கிழமை 24.12.2023 | 08

# தமிழீழ விடுதலைப்புலிகளின் தீர்க்கதரிசன கருத்தை நிரூபித்த ரணில்!



பக்கம் 06

## கஜேந்திரகுமார் சாடல்!



# மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் தேவை!

பக்கம் 02

## மஹிந்த தேசப்பிரிய வலியுறுத்து!

## சர்வதேசத்தில் ஈழத்துப் பெண்ணுக்கு கிடைத்த அங்கீகாரம்!



பக்கம் 02

## யாழ் 2024 புதுவருட வரவேற்பு!

### மின்விளக்குகளால் அலங்காரமானது மணிக்கோபுரம்.



## யாழ் கந்தரோடையில் லட்சுமி நாணயம்! பௌத்த பேரினவாதத்திற்கு தர்மஅடி!!

பக்கம் 05

## திருகோணமலையில் புதிய சிவாலய இடிபாடுகள்!

பக்கம் 06



## மயிலத்தமடு போராட்டம் 100ஆவது நாளை எட்டியது!!




பக்கம் 03

தமிழ் பேசும் மக்களின் தேசியப் பத்திரிகை!

# சர்வதேசத்தில் ஈழத்துப் பெண்ணுக்கு கிடைத்த அங்கீகாரம்!








இங்கிலாந்து கிரிகெட் அணியொன்றில், இலங்கையை சேர்ந்த தமிழ் பெண்ணொருவர் இடம்பிடித்துள்ளார். இலங்கையின் காரைநகரை பூர்வீகமாக கொண்ட அமுருதா சுரேன்குமார் என்பவருக்கே இவ்வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டிற்கான சன்ரைஸ் அக்கடமி குழுவில், 15 வீராங்கனைகளுக்கு வாய்ப்பளிக்கப்பட்ட நிலையில், அதில் ஒருவராகவே அமுருதா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

# மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் தேவை மஹிந்த தேசப்பிரிய வலியுறுத்து!



தெரிவு செய்தலை உடன் மேற்கொள்ள வேண்டும் அனேகமானோர் மாகாணசபை வெள்ளையானை என தெரிவித்து வருவதுடன் மாகாணசபை உறுப்பினர்களை பராமரிக்க அதிக நிதி வீண்டிக்கப் படுவதாகக் கூறி மக்களை ஏமாற்றுகின்றனர். அவர்களின் பராமரிப்புக்கு அரச வருமானத்தில் ஒரு வீதமளவே செல்வாகின்றது என்றார்.
சபை குறித்தான கேள்வியொன்றை எழுப்பும்போது அரச அதிகாரிகள் அதற்கு நேரடியாகப் பொறுப் பேற்காமல் இருக்கின்றனர் மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் இந்நிலை மாற்றமடைந்திருக்கும். தற்போது மாகாணசபை செயற்றிட்டங்களில் மக்கள் கருத்துகளைக் கேட்டறிய வாய்ப்பு இல்லை. எனவே மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதி களைத்
ஜனநாயக நாடு என்ற அடிப்படையில் மாகாணசபை நாட்டுக்கு அவசியம் மாகாணசபை இந்த நாட்டுக்கு அவசிய மில்லை என யாராவது குறிப்பிடுவார் களாயின் ஜனாதிபதி மற்றும் அமைச்சர வையின் தேவையும் இங்கு இல்லை. தற்போது மாகாண சபை மக்கள் கூட்டிணைப்பற்ற அரச அதிகாரி களால் செயற்படுத்தப்படுகின்றது. இதனால்

மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் தேவை என முன்னாள் தேர்தல் ஆணையாளரும், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# கிழக்கு ஆளுநர் செந்தில், எரிக் சொல்ஹெய்ம் சந்திப்பு!





கிழக்கு மாகாண ஆளுநர் கௌரவ. செந்தில் தொண்டமான் அவர்கள் நோர்வே இராஜதந்திரி திரு எரிக் சொல்ஹெய்ம் அவர்களை சந்தித்தார். திரு சொல்ஹெய்ம் 2005 முதல் 2012 வரை நோர்வே அரசாங்கத்தில் பணியாற்றியதுடன், சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் போன்ற பதவிகளை வகித்தார். மேலும், 2016 முதல் 2018 வரை அவர் ஐக்கிய நாடுகள் சபையின் துணைப் பொதுச் செயலாளராகவும், ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தின் நிர்வாக இயக்குநராகவும் பதவி வகித்தார்.

# மயிலத்தமடு பண்ணையாளர்களின் போராட்டம்...! தீர்வின்றி 100வது நாளை எட்டியது!!






மட்டக்களப்பு - மயிலத்தமடு, மாதவனை கால்நடை பண்ணையாளர்களின் போராட்டம் 100ஆவது நாளை எட்டியுள்ள நிலையில் நேற்று மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

குறித்த போராட்டமானது மட்டக்களப்பு சித்தாண்டி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

அத்துமீறி குடியேறிய குடியேற்றவாசிகளிடமிருந்து மேய்ச்சல் நிலத்தை மீட்டு தருமாறு கோரி மயிலத் தமடு, மாதவனை கால்நடை பண்ணையாளர் களால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்றுடன் 100ஆவது நாளை எட்டியுள்ளது.

**பலதரப்பட்டோர் பங்கேற்பு**

போராட்டத்திற்கு சிவில் சமூக அமைப்புகள், அரசியல்வாதிகள், பொது அமைப்புகள், விவசாய அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், மதத்தலைவர்கள் எனப் பல்வேறு அமைப்புக் களுக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த போராட்டத்திற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந் திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந் திரன் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர் கள்.மதத்தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

**கோரிக்கை முன்வைப்பு**

இதன்போது மட்டக்களப்பு மாதவனை பகுதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் சட்டவிரோத குடியேற்ற நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி அவற்றில் கால்நடை வளர்ப்புக்கு வழங்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும், மாதவனை பகுதியில் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய குடியேற்றங்கள், கால்நடைகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள், பொலிஸாரின் செயற்பாடுகள் குறித்து தமது கோரிக்கைகளை உள்ளடக்கிய வகையில் மகஜர் தயாரிக்கப்பட்டு அங்கு கடமையிலுள்ள பொலிஸாருக்கு வழங்கப் பட்டது.

போராட்டத்தின் போது ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன் அமைதியான முறையில் போராட்டம் இடம்பெற் றமை குறிப்பிடத்தக்கது.

## சுமார் ஒரு வருடத்திற்கு பின்னர் நாட்டில் பதிவான கோவிட் மரணம்!

சுமார் ஒரு வருடத்தின் பின்னர் நாட்டில் கோவிட் மரணம் ஒன்று பதிவாகியுள்ளது.

கம்பளை பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கோவிட் தொற்று

இது தொடர்பில் கண்டி தேசிய வைத்தியசாலையை லங்காசிறி செய்திப் பிரிவினர் தொடர்பு கொண்ட போது வைத்தியசாலை தரப்பு இதனை உறுதிப் படுத்தியுள்ளது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குறித்த நபர் நேற்றையதினம் உயிரிழந்துள்ள தாகவும், எனினும் கோவிட் நோய்த் தொற்றுக்கான அறிகுறிகள் அவரிடம் அடையாளம் காணப்பட் டதை அடுத்து இன்று பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், உயிரிழந்த குறித்த நபர் கோவிட் தொற்றால் உயிரிழந்தமை உறுதிச் செய்யப் பட்டுள்ளது.

# தேசிய மட்டத்தில் சாதனை! மட்/கற்சேனை, ஆரையம்பதி மைந்தர்கள்!!

இந்திய தூதுவராலயத்தின் ஏற்பாட்டில் கொழும்பு இந்திய கலாசார நிலையத்தில் நடைபெற்ற தேசியமட்ட பகவத்கீதை சுலோகங்கள் கூறுதல், மற்றும் பகவத்கீதையை விளங்கிக் கொள்ளுதல் என்ற இரண்டு போட்டிகளிலும் மட்டக்களப்பு மாணவர்கள் முதலிடங்களை பெற்றுக்கொண்டதுடன் ஒரு போட்டியில் இரண்டாமிடத்தையும் பெற்று சாதித்தனர்.

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பல மாணவர்கள் பங்குபற்றிய இப்போட்டிகளில் எம் மட்டக்களப்பு மண் ஈன்றெடுத்த மாணர்கள் முதலாமிடம் பெற்று சாதித்து காட்டியுள்ளமை பாராட்டப்பட வேண்டிய விடயமே

இப் போட்டிகளில் படுவான் பெருநிலப்பரப்பில் உள்ள அடிப்படை வசதிகள் குறைந்த கற்சேனை எனும் கிராமத்தை சேர்ந்த கண்ணன் திவானுஜன் எனும் மாணவனும் ஆரையம்பதி பக்தப்பிரகலாதன் அறநெறிப்பாடசாலை மாணவன் கிருஷ்ணராஜா கதிஸ்பிரணாத் ஆகிய இருவருக்கும் முதலாம் இடத்தினை பெற்றுக்கொண்டதுடன் அவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாய் பணப்பரிசும் சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டது.

அத்தோடு கற்சேனையைச்சேர்ந்த விதுசன் சதுசனா என்ற மாணவி இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டதுடன். முப்பதாயிரம் ரூபாய் பணப்பரிசும் சான்றிதழும் வழங்கிவைக்கப்பட்டது

இவர்களுக்கான பரிசில்களை இந்தியத் தூதுவரால் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது வெற்றி பெற்ற மாணவர்களை நாமும் வாழ்த்துகிறோம்.

# யாழின் வீதியோர நிழல் தரு மரத் தெரிவில் மாற்றம் கோரும் மக்கள்!





யாழ்ப்பாணத்தின் பல வீதிகளின் ஓரங்கள் யாவும் நிழல் தரும் மரங்களை நாட்டி வளர்த்து வருகின்றனர். இலங்கையில் வீதியோரங்களில் மரங்களை நாட்டி வளர்ப்பது இயல்பானதாகும். வீதிகளை அமைக்கும் போதும் அதனை அகலமாக்கும் போதும் இயற்கையாகவே அந்த நிலங்களில் நின்ற மரங்களை வெட்டி அகற்றிவிட்டு வீதிகளை அமைத்த பின்னர் நிழலுக்காகவும் அழகுக்காகவும் மரங்களை புதிதாக நட்டு வளர்க்கின்றனர்.

யாழ்.மிருசுவில்லில் இருந்து சாவகச்சேரி வரை வீதியில் நிழல் தரு மரங்கள் நட்டு வளர்க்கப்பட்டு வருகின்றமையை உற்று நோக்கும் போது பல வினாக்கள் வழி சிந்தனை தூண்டப்படுவதனையும் பொருளாதார, கலாச்சார அடிப்படைகளில் அவை ஆச்சரிய மூட்டும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதை இனம் காட்டுவதாகவும் சமூக மாற்றங்கள் தொடர்பாக ஆய்வில் ஈடுபட்டுள்ளவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மிருசுவில் முதல் சாவகச்சேரி வரையான வீதியின் அமைவு இயற்கையோடு சமூகமயப் பட்டுள்ளது. புகையிரத பாதையையும் A9 பாதையும் அருகருகே கொண்டுள்ளதோடு இந்த இரு பாதைகளையும் தழுவியதாக இரு பக்கங்களிலும் மக்கள் குடியிருப்புக்கள் இருக்கின்றன.

பிரதான போக்குவரத்துப் பாதையான போதும் மக்கள் மத்தியில் அமைந்துள்ள இயற்கையான தாவரச்சூழலை கொண்டதுமான அமைப்பு முறையை கொண்டுள்ளது. புகையிரத பாதையைக்கும் A9 பாதைக்குள் இடையில் நிழலை விரும்பி நாட்டிய மரங்கள் இருக்கின்றன.

அவை வளர்ந்து நிழலை கொடுக்கும் போது அந்த அமைப்பியல் இன்னும் அதிகளவான இயற்கை பேரழகை கொடுக்கும் என்பது திண்ணம்.

வீதிகளின் அமைவு சூழலில் உள்ள தரையமைவோடு இசைந்து போவதால் இந்த சாதக நிலை மேலும் பொருத்தப்பாடான சூழலை தருகின்றது என வீதியோர மரநடுகைகளில் ஆர்வம் கொண்டு தன் பங்களிப்பை ஆற்றி வரும் தன்னார்வலர் ஒருவர் விபரித்தார்.

இது போல் ஏனைய இடங்களிலும் பொருத்தப்பாடான அமைவுகள் இருக்கின்றன என அவர் மேலும் குறிப்பிட்டார்.யாழ் கோட்டையின் சுற்றுவட்டப் பாதையிலும் பயணத்தை நயினாதீவுக்கு திருப்பி விடும் சந்தியிலும் நாட்டி வளர்க்கப்படும் நிழல் தரும் மரங்களை சுட்டிக்காட்டியமையும் குறிப்பிடத் தக்கது.

எழுதுமட்டுவாள் வீதியின் மரங்கள்

முகமாலை, எழுதுமட்டுவாள்,கொடிகாமம் ஆகிய கிராமங்களை ஊடறுத்துச் செல்லும் A9 வீதியும் அதனோடு இணைந்த புகையிரத பாதையிலும் நிழல் தரும் மரங்களை நாட்டி வளர்த்து வருகின்றனர்.

அவையும் வளர்ந்தேகி பெருமரங்களாகி நிழல் கொடுக்கும் போது யாழ்ப்பாணம் நோக்கிய பயணத்தில் இயற்கையோடு இணைந்து பயணப்படும் உணர்வை மக்கள் பெற்று இன்புறலாம் என சமூக விடய ஆய்வாளர்களால் எடுத்துரைக்கப்படுகின்றது.

அபிவிருத்தியோடு கூடிய சூழல்நேயத் தன்மையை பேணுவதில் வீதியோர மரங்களின் நடுகையும் அவை பேணப்படுவதும் பெரும் பங்களிப்பை நல்கும்.

எனினும் இந்த மர நடுகைகளை கூடிய கவனம் எடுத்து எதிர்கால திட்டமிடல்களோடு முன்னெடுக்க வேண்டும் என சுற்றுச்சூழலியலாளர்கள் சிலரிடம் கருத்துக் கேட்டு போது குறிப்பிட்டனர்.

அவர்கள் பல விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தார் என்பதும் உற்று நோக்க வேண்டிய விடயமாகும்.

மண்ணுக்கு புதிய மரங்களாக யாழில் நிழல் தரு மரங்கள் நிழல்தரு மரங்களை தெரிவு செய்யும் போது அவை பிராந்திய பொருத்தப்பாட்டினை கொண்டிருக்க வேண்டும். இல்லையெனில் அவற்றால் கிடைக்கும் பயன்களை விட தீமைகளே அதிகமாக இருக்கும்.

பிராந்தியத்திலுள்ள யாதேனுமொரு இடத்தில் இயற்கையாக வளராத மரங்களை புதிதாக கொண்டுவரும் போது அவை அவசியம் தேவைதானா என சிந்திக்க முற்பட்டு அவற்றை கொண்டுவராதிருக்கும் நோக்கோடு காரணங்களை ஆய்வு செய்யும் போது அவசியம் உணரப்படுமெனின் அவற்றை நிழல் மரங்களாக பயன்படுத்தலாம்.

அவ்வாறு அவற்றை பயன்படுத்துவதை விட வேறு சாதமான இயல்புகளோடு நிழலையும் தரக்கூடிய பிராந்திய மரங்கள் இருக்குமெனின் அவற்றை நாட்டுவதே பொருத்தமானதாக இருக்கும் என அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

யாழ்ப்பாணத்தின் தரையமைவு ஏனைய இடங்களை விட வித்தியாசமானது என்பதும் இங்கே நோக்க வேண்டும்.நிலத்தடியில் சுண்ணாம்புப் பாறைகளை கொண்ட நிலமாக அது இருக்கின்றது.வன்னி போல் கருங்கல் பாறைகள் யாழ்ப்பாணத்து நிலத்தில் இல்லை.

மேல்தட்டு புவியோட்டில் மண்ணின் ஆழம் அதிகமாயிருக்கும் சூழலிலும் மண்ணின் ஆழம் குறைவாக இருந்து அவை பாறைகளை கொண்டிருக்கும் போது மரங்கள் தொடர்பிலும் அவற்றின் வேர்கள் தொடர்பிலும் கவனம் எடுக்க வேண்டும்.

மரங்களுக்கு மரங்கள் அவற்றின் உடலால் வெவ்வேறு பதார்த்தங்களை சுரந்து புறச்சூழலுக்கு விடுகின்றன. வேர்களால் சுரக்கப்படும் பதார்த்தங்கள் நிலத்தடியில் ஏற்படுத்தும் மாற்றங்கள் பாறைகளையும் மண்ணின் இழையமைப்பையும் மாற்றாத வகையில் இருக்க வேண்டும். இந்த நிழல் தரும் மரங்கள் விருட்சங்களாகும் போது அவை ஆக்கிரமிப்பு போக்கினை காட்டாதிருக்கவும் வேண்டும்.

வன்னியில் பரவலாக காணப்படும் இரு தாவரங்களை சுட்டிக்காட்டல் பொருத்தமானதாகும்.மக்களால் காசு மரம் என அழைக்கப்படும் கொடித்தாவரமும் பன்னீர் மரம் என அழைக்கப்படும் மலைவேம்பு போல் உயர்ந்து வளர்ந்து வெண்ணிறப் பூக்களை பூக்கும் இரு மரங்களை அழகுக்காக நாட்டியிருந்தனர்.

நாட்டப்பட்டிருந்த இடங்களில் அவற்றின் வாழ்க்கை காலம் நீண்டு போனபோது அவை ஆக்கிரமிப்பு தாவரங்களாக மாற்றமடைந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இது போல் நிழலை முன்னுரிமைப்படுத்தி தெரிவு செய்யப்படும் தாவரங்களால் ஏற்படும் அச்சுறுத்தல் தொடர்பில் மக்களிடையேயும் மர நடுகைகளை ஊக்குவிக்கும் நபர்களிடையேயும் தெளிவற்ற நிலை இருப்பதனை இந்த கோணத்தில் மேற்கொண்ட கேள்விக்கனைகளிற்கான பதிலுரைப்புக்களிலிருந்து அறிய முடிந்திருந்தது.

வீதியோர மரங்களாக வேம்பும் மாவும் நல்ல விளைவுகளைத் தரும்

யாழ்ப்பாணம் முழுவதும் மண்ணோடும் மக்களோடும் இசைந்து வாழ்ந்து வளரக்கூடிய வேப்பமரங்கள் நன்கு நிழல் தந்து பயன் தரக்கூடியவை. வேப்பமர நிழலில் இருப்பது உடலுறுதியைத் தரும்.

வேப்பம் இலையும் வித்தும் நோயெதிர்ப்பை கொடுப்பதோடு விவசாயத்தில் களைக்கொல்லியாகவும் தானியங்களை பூச்சிகளிடமிருந்து பாதுகாப்பதற்கும் உதவுகின்றது. நுளம்புகளை விரட்டுவதற்கு புகையூட்டும் பொருளாகவும் பயன்படுகிறது.

வேப்பம்பூ கொண்டு வடகம் செய்து உணவோடு உண்ணும் பாரம்பரியம் தமிழர்களுடையது.இத்தனை பயனுடைய வேம்பமரத்திற்கு வீதியோர மரநடுகைகளில் முன்னுரிமை கொடுத்தால் மக்களுக்கு நிழலோடு அதிகபயன் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

வேம்பு யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய மரங்களில் ஒன்று என்றும் வேம்பை வீதியோர மரங்களாக நாட்டுதல் நலன் மிக்கது என்றும் யாழ்பபாண பாரம்பரியம் தொடர்பாக பேச வல்ல ஒருவர் குறிப்பிட்டார்.

வீதியோர மரங்களாக மக்கள் வாழிடங்களினூடாக செல்லும் பாதைகளில் மாமரங்களையும் தெரிவு செய்யலாம் என மாமர பயின்செய்கையாளர் ஒருவர் குறிப்பிடுகின்றார்.

மாமரங்களில் விழாட் பொருத்தப்பாடு கூடிய மரம்.நீண்ட கால தாவரமாக மாமரங்களுள் நல்ல குடையைமைப்பை பேணக்கூடியது விழாட் வகை மாமரங்கள்.

கறுத்தக்கொழும்பான், விழாட் மாமரங்களை நாட்டி பராமரிக்கும் போது நிழலோடு பழ உற்பத்தியும் சாத்தியமாகும்.யாழ்ப்பாணத்து கறுத்தக்கொழும்பான் பழத்திற்கு நல்ல சந்தை வாய்ப்புக்கள் இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

மாமரங்களை வீதியோர நிழல் தரு மரங்களாக நடுவதற்கு திட்டமிடும் போது வீதியோர பயிர்ச்செய்கை தொடர்பாகவும் வீதிகளின் ஒழுங்கு முறைகளையும் ஒருங்கிணைக்கக் கூடிய புதிய திட்டமிடல் ஒன்று அவசியமாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஆசிரியராக கடமையாற்றி தன் ஓய்வு காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மாமரபயிர்சசெய்கையாளரான இந்த ஐயா ”இப்போதெல்லாம் புதிய புதிய மாமர இனங்கள் எட்டிப்பார்க்கின்றன.

யாழ்ப்பாணத்தின் பாரம்பரியத்தை மாற்றியமைத்து விடுமோ என்ற அச்சம் தனக்கிருப்பதாகவும், நல்ல பாரம்பரியங்களை தொடர்ந்து பின்பற்றி பேணிப் பாதுகாத்தல் ஒன்றே ஈழத்தமிழர்களின் இருப்பை வலுவாக்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வீதியோர நிழல்தரு மரத்தெரிவு

எதிர்காலத்தில் வீதியோர நிழல் தரு மரங்களை நாட்ட முற்படும் போது பிராந்திய பொருத்தப்பாட்டையும் மக்கள் நலன் சார்ந்து ஒன்றுக்கு மேற்பட்ட பயன்களைத் தரக்கூடியதையும் கருதி தாவரங்களை தெரிந்தெடுத்தால் அது எதிர்காலத்தில் நிறைந்த பயனுடைய செயற்பாடாக அமையும்.

உரிய தரப்பினரும் ஈழத்தமிழ் இளையவர்களும் இது தொடர்பில் தகவல்களைத் தேடியறிந்து தெளிவுகளைப் பெறுதல் மூலம் எதிர்காலத்தில் இதனை சாத்தியமாக்கலாம்.

# யாழ் கந்தரோடையில் லட்சுமி நாணயம்! பௌத்த பேரினவாதத்திற்கு தர்மஅடி!!





சொர்ணலிங்கம் வர்ணன்

யாழ்ப்பாணத்தின் கந்தரோடை பகுதியில் மேற் கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் மூலம் இற்றைக்கு 2800 ஆண்டுகளுக்கு முன்னரே வரலாற்று உதயகால குடியிருப்புக்கள் மற்றும் இந்து மதக் கடவுளான லக்சுமி நாணயமும் கந்த ரோடை பகுதியில் இருந்தமைக்கான சான்றுகள் விஞ்ஞான பூர்வமான காலக்கணிப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வடஇலங்கையின் முதன் முதலில் முறையாக மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான பூர்வமான காலக் கணிப்பாக அமைகின்றது.

கந்தரோடை தொல்லியல் அகழ்வாய்வானது இலங் கைத் தொல்லியல் திணைக்களத்தின் அனுமதி யுடனும், பங்களிப்புடனும் ஜெர்மனிய தொல்லியல் நிறுவனம் ஐரோப்பியர் அல்லாத கலாசாரங்களின் தொல்லியல் ஆணையம், Bonn மற்றும் யாழ்ப் பாண பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை, இரஜரட்டை பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை ஆகியோரால் இணைந்து மேற்கொள்ளப் பட்டிருந்தது.

இவ்வாய்வின் முக்கிய வளவாளர்களாக இலங் கைத் தொல்லியல் திணைக்களத்தின் முன்னாள் பிரதிப்பணிப்பாளர் கலாநிதி. நிமால் பெராரா ஜெர்மனி தொல்லியல் நிறுவனம் - ஐரோப்பியர் அல்லாத கலாசாரங்களின் தொல்லியல் ஆணை யம், Bonn சார்பாக அரியாணி டி சக்சி, இரஜரட்டை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நுவான் அபேயரத்ன, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை சிரேஸ்ட விரிரையாளர் சிவரூபி சயிதரன் ஆகியோர் ஆய்வில் பங்கெடுத்திருந்தனர்.

மற்றும் தொல்லியல் திணைக்களத்தின் யாழ்ப் பாணப் பிராந்திய அலுவலகம் சார்பாக அகழ்வாய்வு உத்தியோகத்தர் வி.மணிமாறன மத்திய காலாசார நிதிய யாழ்ப்பாண செயற்திட்டத்தினர் ஆகியோரும் ஆய்வில் பங்கெடுத்திருந்தனர்.

இவ்அகழ்வாய்வின் போது யாழ்ப்பாண பல்கலைக் கழக மற்றும் களனிப் பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்களுக்கு பயிற்சிகளும் வழங்கப் பட்டிருந்தது.

கந்தரோடை அகழ்வாராட்சியின் ஊடாக வரலாற் றுக்கு முற்பட்ட காலம் தொட்டு வராலாற்றுக்காலம் வரையிலான கலாச்சார அடுக்குகள் கண்டுபிடிக்கப் பட்டிருந்தது.

எனினும் கிடைக்கப்பெற்ற சான்றாதாரங்களினை விஞ்ஞான பூர்மான காலக்கணிப்பிற்கு உட்படுத்தப் பட்டதன் அடிப்படையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வரலாற்று உதயகாலம் தொட்டு ஆரம்ப வரலாற்றுக் காலம் வரையிலான பண்பாட்டம்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

அத்தோடு லக்சமி நாணயங்களும் கண்டுபிடிக்கப் பட்டுள்ள நிலையில் குறித்த பகுதியில் இந்துக்கள் பூர்விகமாக வாழ்ந்ததற்கான ஆதாரங்களாக இவை அமைகின்றன.

இவற்றின் காலம் கி.மு 750ஆம் ஆண்டிற்குரியதா கவும், கி.மு 400ஆம் ஆண்டிற்குரியதாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

ஜெர்மனி தொல்லியல் நிறுவனம் ஐரோப்பியர் அல் லாத கலாசாரங்களின் தொல்லியல் ஆணையம் மேற்கொள்ளப்பட்ட கார்பன் 14 காலக்கணிப்பு முறையூடாக பெறப்பட்டிருந்தது

மேலும் கந்தரோடை அகழ்வாய்வின் போது வரலாற்றுக்கு முற்பட்டகாலப் பண்பாடும் அடையா ளப்படுத்தப்பட்டுள்ளதென்பதனை இவ்அகழ்வாய் வுக்கு தலைமை தாங்கிய கலாநிதி. நிமால் பெராரா தெரிவுத்துள்ளார்.

இவ்வரலாற்றுக்கு முற்பட்டகாலப் பண்பாட்டின் தொடர்ச்சியாகவே வரலாற்றுதயகாலப் பண்பாட்டம் எச்சங்கள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றுக்கு முற்பட்டகாலச் சான்றாதாரங்கள் OSL காலக்கணிப் பிற்கு உட்படுத்தப்படுகின்றது.

இத்தேதியிடல் முடிவுகள் மிகவிரைவில் கிடைக்கப் பெறும் என நம்புகின்றோம். இவ்வாறு இவ்வரலாற் றுக்கு முற்பட்டகால சான்றுகளுக்குரிய OSL காலக் கணிப்பு சாதகமாக அமையப்பெறும் நிலையில் யாழ்குடாநாட்டின் வரலாற்றுக்கு முற்பட்டகால பண் பாட்டின் காலமானது இன்னும் பல நூற்றாண் டுகளாக அதிகரிக்கப்படும் என்பதில் மாற்றமில்லை.

இவ்அகழ்வாய்வில் கிடைக்கப்பெற்ற சான்றாதாரங் கள் கந்தரோடையில் ஒரு வளமான நாகரிகம் தோற்றம் பெற்றிருந்ததனை உறுதிப்படுத்துகின்ற தெனலாம். குறிப்பாக வரலாற்று உதயகாலத்திற் குரிய இரும்புத் தொழினுட்பம், நெல் மற்றும் தானியங்களின் சாகுபடி, கால்நடைகள் வளர்ப்பு, மீன்பிடித் தொழினுட்பம் என்பன சிறப்பாக இருந் தமைக்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றிருந்தன.

இவ்வாறான தொன்மையான குடியிருப்புக்குரிய சான்றுகளுடன் பலவகையான மட்பாண்ட சான்றாதாரங்கள், கல் மணிகள், பலவகை மணி கள் போன்றனவும், அவை உற்பத்தி செய்யப் பட்டமைக்கான ஆதாரங்களும் கிடைக்கப்பெற்றி ருந்தன.

அத்துடன் கார்ணிலியன் கற்கள், பலவகை நாணய ங்கள், முத்திரைகள், எலும்பிலான எச்சங்கள் போன்ற பல சான்றாதாரங்களும் கிடைக்கப் பெற்றன. இவை யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரலாற்று உதயகாலப் பண்பாண்டம்சங்கள் இற்றைக்கு 2800 ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்து தொடர்ச்சியுற்றதனை உறுதிப்படுத் துவதாகவும் உள்ளது.

# தமிழீழ விடுதலைப்புலிகளின் தீர்க்கதரிசன கருத்தை நிரூபித்த ரணில்! கஜேந்திரகுமார் சாடல்!



**தமிழீழ விடுதலைப்புலிகள் 2005 ம் ஆண்டு "ரணிலை நம்பவேண்டாம்" என தெரிவித்த விடயம் தற்போது நிரூபனமாகியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சாடியுள்ளார்.**

மேலும், இந்த உண்மையை விடுதலைப்புலிகள் சொன்ன போது மக்கள், தமிழர் ஆய்வாளர்கள் குழம்பினர். ஆனால் அன்று தீர்க்கதரிசனமாக புலிகள் தெரிவித்ததை இன்று ரணில் விக்ரமசிங்க அவருடைய செயற்பாடுகளால் நிரூபித்துள்ளார் என கூறியுள்ளார்.

மட்டக்களப்பு ஊடக மையத்தில் நேற்று முந்தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது கஜேந்திர குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

நல்லிணக்கம் தொடர்பான பேச்சுவார்த்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தமிழ் தேசிய மக்கள் முன்னணியை தவிர்த்து ஏனைய தமிழ்கட்சியினர் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து தீர்வு நல்லிணக்கம் தொடர்பான சந்தித்து பேசினார்.

இந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பதாகவே சர்வதேச சமூகத்திற்கு இந்த பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டதன் முன்போன பெப்ரவரி சுதந்திர தினத்தின் முன்னர் இனப்பிரச்சனைக்கு தீர்வு எட்டப்படவேண்டும் என்ற அடிப்படையிலே அமைய வேண்டும் என பேச்சுவார்த்தையின் முதல் சுற்று ஆரம்பித்தது.

அதன் பின்னணியில் நேற்றைய தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையிலே ஊடகங்கள் வெளியிட்டு தலையங்கள் நாடாளுமன்ற தேர்தலின் பின்பு அரசியல் தீர்வு 13ஆம் திருத்தத்தை முழுமையக நடைமுறைப்படுத்துங்கள் என் கோரியுள்ளதாக தலையங்கள் பல உண்மைகளை வெளிக் கொண்டுவருகின்ற வகையில் அமைந்திருந்தன.

அனைத்தும் ஒரு நாடகம்

முதலாவது இந்த பேச்சுவார்த்தை கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் ரணிலால் ஆரம்பிக்கபட்ட பொழுதே தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெளிவாக மக்களுக்கு எடுத்துச் சொன்னது

இது அனைத்தும் ஒரு நாடகம். இலங்கை பொரு ளாதார நெருக்கடியில் உள்ள நிலையில் சர்வதேச நாடுகளில் அரசு பிச்சை கேட்கின்ற நிலை காணப்படுகிறது.

**இலங்கையின், பொருளாதார நெருக்கடிக்கு அடிப்படை காரணமே இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வு இல்லாமல் ஒரு யுத்தத்திற்கு சென்று யுத்தத்தை நடாத்துவதற்கு முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள்தான் என்றார்.**

# திருகோணமலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய சிவாலய இடிபாடுகள்!





தமிழர் தலைநகரான திருகோணமலையில் புதிய சிவாலய இடிபாடுகள் தொகுதி கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

வவுளாமடு என்ற இடத்தில் அடர்ந்த காட்டின் நடுவில் இந்த ஆலய எச்சங்கள் இடிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலும், இரண்டு சிவலிங்கங்கள், கருங்கற் பொழிவுகள், பாரிய கருங்கற்றூண்கள், கருங்கல் மேடை மற்றும் தூண்தாங்கு கற்கள் என்பனவும் ஆங்காங்கே காணப்பட்டுள்ளன.

மருத்துவர் அருமைநாதன் சதீஸ்குமார் மற்றும் அவரது நண்பர்களின் உதவியுடன் இந்த இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மன்னார் மாவட்டத்திற்கு புதிய அரச அதிபர்!





**மன்னார் மாவட்ட புதிய அரசாங்க அதிபராக க.கனகேஸ்வரன் நேற்று(23) தனது கடமைகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.**

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் நியமனத்தில் நீண்ட மாதங்களாக தாமதம் ஏற்பட்டு வந்த நிலையில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க.கனகேஸ்வரன் புதிய அரச அதிபராக கடந்த 21 ஆம் திகதி பொது நிர்வாகம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அசோகவிடமிருந்து நியமன கடித த்தை பெற்றுக் கொண்டார்.

இந்த நிலையில் புதிய அரச அதிபரை வரவேற்கும் நிகழ்வு நேற்று(23) மாவட்ட செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

மாவட்ட அபிவிருத்தி குறித்த நிகழ்வின் பின்னர் புதிய அரசாங்க அதிபர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் தீர்க்கப்படாமல் காணப் படும் காணி விடுவிப்பு, சட்டவிரோத மணல் அக ழ்வு, சுற்றுசூழல் பிரச்சினை, கழிவகற்றல், வனஜீ வரசிகள் திணைக்களம் மற்றும் வனவள திணைக்களத்தின் கீழ் காணப்படும் காணிகளை விடுவிக்கும் விடயங்களை முன்னிலைப்படுத்தி செயற்பட உள்ளதாகவும் அதே நேரம் மாவட்ட அபிவிருத்தி விடயங்களை துரிதப்படுத்தி மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை விரைவு படுத்துவதாகவும் கூறியுள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்டத்தின் முன்னால் அரசாங்க அதிபர் திருமதி.ஸ்ரான்லி டிமேல் , மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் ,பிரதேச செயலாளர்கள் உட்பட திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகஸ்தர்கள், மதத்தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

# வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் உலர் உணவுப் பொதிகள் ஒப்படைப்பு!

**வடக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஒரு தொகுதி உலர் உணவுப் பொருட்கள் வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.**

தற்போது பெய்துவரும் கனமழை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கும் நோக்கில் சர்வதேச அரிமா கழகத்தினால் ஆயிரம் பொதிகள் ஆளுநரின் உதவிச் செயலாளர் ஜி.ஏகாந்தனிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஜனாதிபதியின் வடக்கு விவகாரங் களுக்கான மேலதிக செயலாளர் இளங்கோவன், ஆளுநர் செயலக அதிகாரிகள், வடமாகாண அரிமாக் கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டி ருந்தனர்.

குறித்த பொதிகள் விரைவில் பாதிக்கப்பட்ட பொது மக்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.



# யாழ் அனலைதீவு நாகேஸ்வரர் ஆலயம்!
# திருவெம்பா பிட்டுப் பூஜை-23.12.2023
# பிட்டுக்கு மண் சுமந்த பெருமானின் கதை!!



தேசியம் பத்திரிகையின்
மின்னிதழைப் பெற
இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில்
இணைந்து கொள்ளுங்கள்.

SCAN ME

No. 27, Kannathiddy Road,
Jaffna.Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com
Whatsapp
+94 76 567 3339

## யாழ் பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேர்

